1994 ஏப்ரல் 26]

387--

அவினாசி தொகுதியில் கீழ்க்கதவுக்கரைக்கும் மேல்கதவுக்கரைக்கும் போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல்.

***21518–டாக்டர் மு. சீனியம்மாள் :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அவினாசி தொகுதியில் கடைசி எல்லையிலுள்ள கீழ்கதவுக்கரை, மேல்கதவுக்கரை ஊர்களுக்கு போக்குவரத்து வசதி செய்ய அரசு முயலுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அவ்வூர்களுக்குச் செல்லும் சாலை செப்பனிடப்பட்டு அகலமாக்கப்பட்ட பின்னர், பேருந்து வசதி செய்து தரப்படும்.

389--

ஐரோப்பிய நிதி உதவித் திட்டத்தின் மூலம் குளங்களைப் பராமரித்தல்.

***10236--திரு. ஆர். ஈஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

ஐரோப்பிய நிதி உதவித் திட்டத்தின் மூலமாக குளங்கள் பராமரிப்பு 250 ஏக்கரில் இருந்து, 500 ஏக்கர் எடுக்கப்பட்டு வருவதை, 500 ஏக்கரில் இருந்து 1,000 ஏக்கர் வரை எடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]